★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✱ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: ஆடி 30உ செவ்வாய் (14—8—56) ★ ★ வெளியூர் : ஆடி 31உ புதன் (15—8—56) [இதழ் 55

'மகா குசராத் வேண்டும்'

25,000 தபால் கார்டுகள் நேருவைக் கேட்கின்றன!

பரோடா, ஆக. 18—

'குசராத் மாநிலம் அமைக்க வேண்டும்'—'இருமொழி பம்பாய் மாநிலம் கூடாது'—என்றுகோரி மகா குசராத் ரச்சன் சமிதி ஒரு 'தபால் கார்டு' இயக்கம் ஒன்று, நடத்துகிறது.

சுமார் 75 000 பேர் கையொப்பமிட்டு 25 000 தபால் கார்டுகள் வரை பண்டித நேருவுக்கு இதுவரை அனுப்பப்பட்டுள்ளனவாம்.

(4-ம் பக்கம் பார்க்க)

மொரார்ஜிதேசாய்க்குகொடும்பாவி

10 வயதுச் சிறுமி தலைமை தாங்கி நடத்திய ஊர்வலம்

'தியாகிகள் தின'த்தில் கருப்பு உடை தரித்த பெண்கள் அணிவகுப்பு

குசராத் எங்கும் கடையடைப்பு

போலீசார் அளவுகடந்தல் குறித்துப் பத்திரிகையாளரிடம் பெண்கள் முறையீடு

ஆமதாபாத், ஆக. 14—

போலீசார் விதித்திருந்த ஊரடங்குச் சட்டத்தைக் கேலி பேசும் வகையில் இருமொழி பம்பாய் மாநில எதிர்ப்பு ஆர்ப்பாட்டக்காரர்கள் இன்று வீட்டு மாடிகளிலும் கூரைகளிலும் ஏறிக்கொண்டு எதிர்ப்புக் கோஷங்களை முழக்கியும் சங்குகளை ஒலித்தும் ஆர்ப்பாட்டம் நடத்தியிருக்கின்றனர்.

இதற்கு முன்பாக சுமார் 50 பெண்கள், ஒரு போலீஸ் நிலையத்திற்குச் சென்று அனாவசியமாகப் போலீசார் கண்ணீர்ப்புகை பிரயோகம் செய்வதை நிறுத்துமாறு கோரினர் என்றும், அதற்குப் போலீசார் கண்ணீர்ப்புகைக் குண்டுகளை அந்தப் பெண்கள் மீதே மீண்டும் வீசி அவர்களைத் துரத்தினர் என்றும் தெரிய வருகிறது

போலீசார், அளவு கடந்து அடக்குமுறைகளைப் பிரயோகிக்கிறார்கள் என்று பத்திரிகைகளில், சில எழுதியிருந்தன ; உடனே போலீஸ் அதிகாரிகள் பத்திரிகை நிருபர்களை அழைத்துக் கொண்டு சென்று, நகரின் பல பாகங்களையும் அவர்களுக்குக் காட்டியிருக்கின்றனர்

கூட்டம் கூட்டமாகப் பெண்கள் பத்திரிகையாளர்களை அணுகி, வீட்டுக்குள் புகுந்து போலீசார், ஒரு பாவமுமறியாத குழந்தைகளையும் பெண்களையும் வெளியே இழுத்துவந்து, தடி கொண்டு தாக்கி இம்சித்ததாக முறையிட்டிருக்கின்றனர்

மேலும், மனிதாபிமானம் சிறிதும் இல்லாத வகையில், வீடுகளுக்குள்ளும் கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வெடித்தனராம் போலீசார். இதனையும் பத்திரிகையாளரிடம் பெண்கள் தெரிவித்துள்ளனர்.

'துப்பாக்கிக் குண்டுக்கு இரையாவீர்'

ஒரு போலீஸ்காரர் ஒரு வீட்டுக்குள் நுழைவதைக் கண்டுவிட்டு, அதிகாரி ஒருவரைச் சந்தித்து விபரம் கேட்டபோது, அந்த அதிகாரி தோழர் காமத்திடம், 'அங்கிருந்து அவர்கள் கல்லெறிவதாகத் தெரிகிறது; எனவே, வீட்டு ஜன்னலைத் திறந்தால் துப்பாக்கிக் குண்டுகளுக்கு இரையாவீர்கள் என்று எச்சரித்துள்ளோம்' என்று கூறினாராம்.

'இப்படித்தான் உள்ளது, இங்குள்ள போலீசாரின் போக்கு!' என்று காமத் கூறியுள்ளார்.

முதன் மந்திரிக்குக் கொடும்பாவி!

ரெய்ப்பூர் பகுதியில் ஏராளமான ஆண்களும் பெண்களும் அடங்கிய ஊர்வலம் ஒன்றில், பம்பாய் முதன் மந்திரி மொரார்ஜி தேசாய் உருவம் செய்து கொடும்பாவி கட்டி இழுத்திருக்கிறார்கள்.

அஸ்தோதியா எனும் இடத்திலும் பம்பாய் முதல்வருக்கு மற்றுமோர் கொடும்பாவி ஊர்வலம் நடைபெற்றிருக்கிறது.

'துணிவிருந்தால் துப்பாக்கியால் சுடுங்கள்!'

ஒரு 10 வயதுப் பெண் ஒரு மாபெரும் ஊர்வலத்திற்குத் தலைமை தாங்கிச் சென்றிருக்கிறாள். அந்த ஊர்வலத்தை, ரெய்ப்பூர் பகுதிக்குள் போகக்கூடாது என ரிசர்வ் போலீசார் தடுத்திருக்கின்றனர். உடனே ஊர்வலத்தவர், 'நாங்கள் போகத்தான் போவோம்; துணிவிருந்தால் துப்பாக்கி கொண்டு சுடுங்கள்' என்று கூறி தொடர்ந்து நடக்க முற்பட்டிருக்கின்றனர்.

வேறு வழியின்றி போலீசார் அந்த ஊர்வலத்தை அனுமதித்திருக்கின்றனர்.

உயிரிழந்தவர்களுக்கு வீர வணக்கம்

கடந்த மூன்று நான்கு நாட்களாக நடைபெற்றுவரும் சம்பவங்களில் உயிரிழந்த தியாகிகளுக்கு வீரவணக்கம் செலுத்தும்வகையில் அகமதாபாத் நகரில் மட்டுமின்றி, குஜராத்தி நகரங்கள் பலவற்றிலும் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டிருக்கிறது.

அகமதாபாத்தில் எண்ணற்ற ஊர்வலங்கள் நடைபெற்றிருக்கின்றன.

கருப்பு உடை தரித்து பெண்கள் ஊர்வலம்

சுமார் 2,000 பேரடங்கிய ஊர்வலம் ஒன்றுக்கு பெண் ஒருவர் தலைமை தாங்கி நடத்தியிருக்கிறார். கருப்புடைத் தரித்த ஏராளமான பெண்கள் ஊர்வலத்தில் அணிவகுத்துச் சென்றிருக்கின்றனர்.

சுமார் 10,000 மாணவர்களடங்கிய ஊர்வலம் ஒன்றும் நடைபெற்றிருக்கிறது.

'மாணவர்கள் தொடர்ந்து 'மகா குசராத்' பெறுவதற்காகப் பாடுபடவேண்டும்' என்று மாணவர் தலைவர்கள் கூறியுள்ளனர்.

அகமதாபாத் எங்கும் கருப்புக் கொடிகள்

ஆயிரக்கணக்கான கருப்புக் கொடிகள், அகமதாபாத நகரை இன்று அலங்கரித்திருக்கின்றன.

துப்பாக்கி – கண்ணீர்புகை பிரயோகம்

'தியாகிகள் தினம்' கொண்டாடப்பட்ட இன்றும், இரண்டு முறை துப்பாக்கிப் பிரயோகமும், எண்ணற்ற முறைக் கண்ணீர்ப் புகைப் பிரயோகமும் போலீசாரால் நடத்தப்பட்டிருக்கின்றன என்றும், ஆலைகள், தொழில் நிலையங்கள், வர்த்தக நிறுவனங்கள், கல்லூரிகள், பள்ளிகள் எல்லாம் மூடிக்கிடந்தன என்றும் தெரிய வருகிறது.

இந்த நிலையில் உள்ள அகமதாபாத் நகருக்கு, மக்கள் சபை உறுப்பினர்களான எச் வி. காமத், ஏ கே. கோபாலன் இருவரும் வந்து பார்வையிட்டுள்ளனர்.

அவர்கள் இருவரும், 'போலீசார் வெறிகொண்டவர்களைப் போல மக்களைத் தாக்கியிருக்கின்றனர்' என்று தெரிவித்துள்ளனர்

'செய் அல்லது செத்து மடி'

குசராத் மக்களுக்கு வேண்டுகோள்

ப்ரோச், ஆக. 13—

"'செய் அல்லது செத்து மடி' என்ற உறுதி மொழியை எடுத்துக்கொண்டு, 'மகா குசராத்' அமைப்பதற்காகக் குசராத் மக்கள்—குறிப்பாக மாணவர்கள் பாடுபட வேண்டும்,"

என்று, குசராத் விவசாய சங்கத் தலைவரான இந்துலால் யக்னிக் என்பார் வேண்டுகோள் விடுத்துள்ளாராம்.

"மாணவர்கள் கல்லூரிகளை விட்டு வெளியேறி, கருப்புத் துணிகள் அணிந்துகொண்டு கிராமங்களுக்குச் சென்று, 'மகா குசராத்' இயக்கத்தைப் பரப்ப வேண்டும்,"

என்றும், அந்த விவசாயத் தலைவர் யோசனை கூறியிருக்கிறாராம்.

இலங்கையைவிட்டு வெளியேறியவர்கள்

சீரமைக்கும் திட்டத்திற்கு அவசியம் ஏற்படவில்லையாம்

புதுடில்லி, ஆக. 14—

மாநிலங்கள் சபையில், வெளிநாட்டு விவகார பார்லிமெண்டரி செயலாளர் திருமதி இலட்சுமி மேனன் கூறியதாவது :—

"இலங்கையை விட்டு வெளியேறுமாறு 'நோட்டீஸ்' பிறப்பிக்கப்பட்டதையொட்டி 9,058 பேர்களும், தாங்களாகவே 17,468 பேர்களும் இந்தியா திரும்பினர் ; அவ்வாறுதிரும்பியவர்களின் வாழ்க்கை வசதி குறித்து எவ்விதத் தகவலும் கிடைக்கப்படவில்லை ; அவர்களைச் சீரமைக்கும் திட்டத்திற்கு அவசியமும் ஏற்படவில்லை"

அருப்புக்கோட்டையில் கைத்தறித் தொழிற்சாலை?

விருதுநகர், ஆக. 14—

கூட்டுறவு முறையில் ரூ. ஒரு இலட்சம் மூலதனத்துடன் ஒரு பெரிய கைத்தறித் தொழிற்சாலை ஆரம்பிக்கப்படுமென்றும், 'குழுத்தறி'களை 'பிரேம் தறி'களாக மாற்றுவதற்கு நெசவாளர்களுக்கு சர்க்கார் பண உதவி அளிக்கப்படுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம் தோல்வியுற்றால்...!

இந்தியா கம்யூனிச மயமாகும்?

பிரிட்டிஷ் தொழிற் கட்சி நிபுணர் எச்சரிக்கை

புதுடில்லி, ஆக. 3—

"இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம் தோல்வியுற்றால், இந்தியா கம்யூனிச மயமாகும்,"

என்று, பிரிட்டிஷ் தொழிற் கட்சிப் பிரமுகர் ஒருவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இந்தியாவின் பொருளாதார அரசியல் நிலைகளை இரண்டு மாத காலம் ஊன்றிக் கவனித்து, நேரு, தேஷ்முக், திட்டக் குழுவினர் முதலியோரிடம் உரையாடிய பின்னர்தான் அவர் இந்த முடிவுக்கு வந்திருக்கிறாராம்.

இந்தியாமீது அனுதாபம் கொண்ட ஒரு வெளிநாட்டு நிபுணர் என்ற முறையில் அவர் தனது 11 பக்க அறிக்கையில் கூறியிருக்கும் இதுபோன்ற விவகாரங்களுக்கு டில்லியில் அதிக முக்கியத்துவம் தரப்படுகிறதாம்.

அவர், பணவீக்கம், போக்குவரத்து, நீர்பாசனம், மக்கள் தொகைப் பெருக்கம், வேலை நிலைகள் முதலியன குறித்துத் தனது அறிக்கையில் விருப்பு வெறுப்பின்றி விமர்சித்திருக்கிறார் என்றும் தெரியவருகிறது.

மாநில—மத்திய சர்க்கார் ஊழியர் சம்பள விகிதங்கள்

'பெரும் ஏற்றத்தாழ்விற்கு நியாயமே இல்லை'

திருவனந்தபுரம்—

"மத்திய சர்க்கார் ஊழியர்களுக்கும் மாநில சர்க்கார் ஊழியர்களுக்கும் தரப்படும் சம்பள விகிதங்களில் பெரும் ஏற்றத்தாழ்வுகள் இருப்பதற்கு எந்தவித நியாயமும் கிடையாது"

என்று, சென்னை மத்திய தொழில் நீதிமன்றத் தலைவரான குஞ்சுகிருஷ்ணபிள்ளை என்பார் தெரிவித்திருக்கிறார்.

"ஏதாவது ஓரிரண்டு உத்தியோகங்களுக்கு இரு சர்க்கார் ஊழியர்களின் சம்பள விகிதங்களிலும் சிறிது ஏற்றத் தாழ்வு இருந்தால் அது நியாயமானதாகக்கூட இருக்கலாம்; ஆனால், சாதாரணமாக எல்லா உத்தியோகங்களுக்கும் சம்பளத்தில் பெரும் ஏற்றத்தாழ்வு இருப்பது 'சோஷலிச மாதிரி' சமூக அமைப்பிற்குப் புறம்பானதாகும்"

என்றும் அவர், திரு-கொச்சி சர்க்கார் ஊழியர்கள் கூட்டம் ஒன்றில் பேசும்போது குறிப்பிட்டிருக்கிறார்.

"எவர் மீதும் குறை கூற வேண்டுமென்பது என்னுடைய நோக்கமல்ல; இது மாநில சர்க்காரும்—மத்திய சர்க்காரும் சேர்ந்து கவனிக்கவேண்டிய ஒரு சிக்கலாகும்" என்றும் அவர் கூறியிருக்கிறார்.

பொதுத் தேர்தல்

அடுத்தஆண்டுதுவக்கத்தில் நடைபெறுமாம்

புதுடில்லி, ஆக. 14—

"முன்னரே திட்டமிட்டுள்ளபடி அடுத்த ஆண்டு ஆரம்பத்தில் பொதுத் தேர்தலை நடத்துவதற்கு சர்க்கார் முயற்சி எடுப்பார்கள்; ஆனால், பிப். 1-ந் தேதிக்கும் 15-ந் தேதிக்கும் இடையே தேர்தல் நடைபெறுமென்று தேர்தல் கமிஷனர் அறிவித்ததாக வெளிவந்த செய்தி சரியல்ல,"

என்று, மத்திய சட்ட விவகார அமைச்சர் எச். வி. படாஸ்கர், மக்கள் சபையில் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

நம் நாடு
தி.மு.க. தினஇதழ்

சென்னை 14—8—'56 செவ்வாய்

'வறுமை இங்கே-செல்வம் அங்கே! தாழ்வு இங்கே-வாழ்வு அங்கே!'

ஒன்பதாண்டுகள்!

தாங்கள் தட்டிப் பறித்து வைத்துக்கொண்டிருந்த இந்தியத் துணைக்கண்ட நாடுகளின் அரசியல் ஆதிபத்திய உரிமையை வடநாட்டுக் காங்கிரஸ் தலைவர்களிடம் வெள்ளை ஏகாதிபத்தியவாதிகள் தந்துவிட்டுச் சென்று ஒன்பதாண்டுகள் ஆகிவிட்டன—நாளை, ஆகஸ்டு பதினைந்தாம் நாளுடன்!

வெள்ளை ஏகாதிபத்தியவாதிகளின் அரசியல் ஆதிக்கப் பிடிப்பிலிருந்து இந்தியா விடுபட்ட நிகழ்ச்சி, உலகெங்கணுமுள்ள விடுதலை விரும்பிகளால் வரவேற்கப்பட்ட ஒன்றாகும். வரலாற்றுச் சிறப்புக்குரிய அந்த நிகழ்ச்சி, இந்தியத் துணைக் கண்டத்து மக்கள் அனைவருக்கும் பெருமகிழ்ச்சி தரக்கூடியதுமாகும்.

திராவிடர்களைப் பொறுத்து, அவர்களது பகைவர்களில் ஒரு கும்பல் ஒழிந்தது; இன்னும் ஒரு கோஷ்டியின் பிடியிலிருந்து அவர்கள் விடுபட்டாக வேண்டும்.

இரு எதிரிகளில் வெள்ளையரிடமிருந்து விடுதலை பெற்றுவிட்டனர் திராவிடர்; வடவரிடமிருந்து இன்னும் விடுதலை பெறவில்லை.

இந்தியத் துணைக் கண்டத்திலிருந்து வெள்ளையர் வெளியேறிய ஆகஸ்டு பதினைந்தாம் நாள், திராவிடருக்கு எந்த அளவு மகிழ்ச்சிக்குரியது என்பதும் இந்த அடிப்படையிலிருந்துதான் கணக்கிடப்படக் கூடியதாகும்.

ஆனால், அரசியல் ஆதிபத்திய உரிமையை வட இந்தியத் தலைவர்களிடம் வெள்ளையர் தந்து சென்ற ஒன்பதாண்டுகளில், இந்தியாவின் நிலைமை என்ன என்பதை நாளை 'சுதந்திர தினம்' கொண்டாடுபவர்கள் கூட்டிக் கழித்துக் கணக்கிட்டுப் பார்த்துக்கொள்ள வேண்டியது மிகமிக அவசியம்.

வெள்ளையராட்சிக் காலத்தில் காங்கிரசார், மக்களிடத்தில் சுதந்திர வாழ்வுபற்றி வர்ணித்தவை எல்லாம்கூட அல்ல—சுதந்திர வாழ்வின் இன்றியமையாதன என்று எடுத்துக் கூறியனவேனும் கடந்த ஒன்பதாண்டுகளில் மக்களுக்கு அனுபவசித்தியாயிற்று என்றால், 'இல்லை' என்பதை வெட்கத்தை விட்டுக் காங்கிரசார் ஒப்பித்தாகவேண்டும்.

வெள்ளையரிடமிருந்து இந்தியா பெற்ற அரசியல் சுதந்திரம், மக்களின் வாழ்வில் குறிப்பிட்டுக் கூறக்கூடிய பெரும் முன்னேற்றம் எதையும் உருவாக்கிவிடவில்லை. அப்படி ஏதேனும் பலன்கள் மக்களின் அனுபவத்திற்குக் கிடைத்துள்ளன என்று காட்டப்படுமானால், அந்தப் பலன்களை அனுபவித்தவர்கள், முழுக்க முழுக்க வடநாட்டவர்தான்!

'சுதந்திரம்' கிடைத்ததின் பயனாகத் தங்கள் கையில் சிக்கிய சகல துறை அதிகாரங்களையும் ஆற்றல்களையும் வடநாட்டுத் தலைவர்கள் ஒருமுகப் படுத்தி, தென்னாட்டின்மீது தாங்கள் கொண்டிருக்கும் ஆதிக்கத்தை நிரந்தரமாக்கிக் கொள்வதற்கே—தென்னவரை முழு அடிமைகளாக்கிவிடுவதற்கே பயன்படுத்தி வந்திருக்கிறார்கள்—கடந்த ஒன்பது ஆண்டுகளில்!

கடந்த ஒன்பதாண்டுகளில் திராவிடர்கள், வடநாட்டு ஏகாதிபத்தியவாதிகளின் மூர்க்கத்தனமான மொழி, அரசியல் ஆதிக்க வெறிக்கும், காட்டுமிராண்டித்தனமான சுரண்டல் நோக்கங்களுக்கும், இமாலயப் பெரிய அநீதிகளுக்கும் இலக்காகி, வாழ்வையும் வளத்தையும் பறிகொடுத்து, தேரையாகத் தேய்ந்துவந்திருக்கிறார்கள்.

கடந்த ஒன்பது ஆண்டுகளில் 'அகில இந்தியா' என்ற அரசியல் அமைப்பு தென்னாட்டவரை மேலும் மேலும் வடநாட்டவரின் பிடியில் இறுகச் செய்வதற்கே பயன்பட்டிருக்கிறது.

தங்கள் வரலாற்றில் வேறெப்போதும் இல்லாத வகையில், கடந்த ஒன்பது ஆண்டுகளில் கொடிய அடிமைத்தனத்திற்கும், அதன் நீசமான அம்சங்கள் பல கொண்ட விபரீத விளைவுகளுக்கும் தென்னாட்டவர் ஆட்பட்டுள்ளார்கள்.

இதே நேரத்தில், கடந்த ஒன்பது ஆண்டுகளில் 'இந்தியாவின் முன்னேற்றத்திற்கு' என்று கூறி, சகல துறைகளிலும் மேற்கொள்ளப்பட்ட பிரம்மாண்டமான முயற்சிகள் அத்தனையும் வடநாட்டின் முன்னேற்றத்தை மட்டுமே மையமாகக் கொண்டன என்பதும், தென்னாட்டவர் அடிமைகள் என்ற நிலையில், அந்த முயற்சிகளை வெறும் பார்வையாளர்கள் என்ற அளவுடன்தான் நோக்க வேண்டியிருந்தது என்பது வடநாட்டுத் தலைவர்கள் சிலராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட உண்மையாகும்.

இந்த நிலையைக் கொண்டும், இந்தியாவின் சுதந்திரம் என்பது வடநாட்டின் சுதந்திரமே தவிரத் தென்னாட்டவருக்கு முழுச் சுதந்திரம் கிடைக்கவில்லை என்ற உண்மையை நிரூபிக்க முடியும்.

எனவே, சுதந்திர தின விழா கொண்டாடுகிற தென்னாட்டவர், முதற்கண், உண்மையான சுதந்திரம் வடநாட்டு ஏகாதிபத்தியப் பிடிப்பிலிருந்து தென்னாடு தன்னை விடுவித்துக் கொள்ளும் போதுதான் மலரும் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டுகிறோம்.

தெரிந்துகொள்ளுங்கள்

சென்னை மாகாணக் காட்டிலாகா, தன் எல்லைக்குள்ளிருக்கும் யானைகளைப் பராமரிப்பதற்காக ரூ. 2,56,000-த்திற்கும் மேற்பட்டு செலவு செய்திருக்கிறதாம்

இந்த ஆண்டுத் தொடக்கத்தில் ரூ 7,08,000-த்திற்கும் மேற்பட்ட மதிப்புள்ள 125 யானைகள் இருந்தனவாம்.

'அந்த ஆண்டு காலத்தில் 13 யானைகள் பிடிக்கப்பட்டன; எழு குட்டிகள் பிறந்தன; 47 யானைகள் விற்பனை செய்யப்பட்டன; 2 இறந்துவிட்டன' என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

குடியுரிமை 'விற்பனை' செய்யப்பட்டதா?

ஐக்கிய தேசியக் கட்சிமீது பண்டாரநாயகா குற்றச்சாட்டு

கொழும்பு, ஆக. 13—

"இதற்கு முன் இலங்கையில் பதவி வகித்த ஐக்கிய தேசியக் கட்சியானது, கட்சிக்கு இலங்கையரல்லாதார் தாராளமாக அளித்து வந்த கொடைகளைப் பெற்றுக்கொண்டு, கௌரவ குடியுரிமை வழங்க முயன்றிருக்கிறது" என்று இலங்கை தலைமை அமைச்சர் பண்டாரநாயகா கூறியுள்ளார்.

"அண்மையில் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த ஒருவர், பம்பாய் மாகாணத்தைச் சேர்ந்த தண்டனை அடைந்த ஒரு குற்றவாளிக்குக் குடியுரிமை அளிக்க வேண்டுமென்று சிபாரிசு செய்தார். இந்த இந்தியர் மேற்கண்ட தலைவரின் சிபாரிசுக் கடிதத்துடனும் அவருடைய கட்சிக்குத் தாம் செலுத்திய நன்கொடை ரசீதுடனும் என்னிடம் வந்தார். ஆனால் விசாரணை நடத்தியதில், இவர்மீது கொலைக் குற்றம் சாட்டப்பட்டு, இவர் சிறைத் தண்டனையும் அனுபவித்து இருக்கிறார் என்பது தெரிந்தது. இப்படிப்பட்டவர்கள் தற்காலிகமாகக்கூடக் குடியிருப்பு அனுமதிச் சீட்டு பெறத் தகுதியற்றவர்கள்.

"எனது அரசாங்கம் இதுவரை யாருக்கும் கௌரவ குடியுரிமை அளிக்கவில்லை. தகுதி உள்ளவர்களுக்கு மட்டும்தான் அந்தக் கௌரவம் அளிக்க வேண்டும் என்பது எனது அரசாங்கத்தின் கொள்கையாகும்.

இலங்கைக் குடியுரிமை இல்லாதவர்களில், நல்ல தொண்டாற்றியுள்ளவர்களாகக் கருதப்படும் 25 பேருக்கு ஆண்டுதோறும் குடியுரிமை வழங்குவதென்பது அரசாங்கத்தின் கொள்கை.

"குடியுரிமை மனுக்களின்மீது 1957 எப்ரலுக்குள் முடிவுகூற முடியும் என நம்புகிறேன். இந்த ஆண்டு முதல் பாதிவரை 37,482 பேர் குடிமக்களாகப் பதிவு செய்யப்பட்டுள்ளனர். பல மனுக்களைப் பொறுத்தவரை, பூர்வாங்க விசாரணைகள் முடிந்துவிட்டன.

இலங்கையில் கள்ளத்தனமாகக் குடியேறுவது குறைந்திருக்கிறது. ஆனால் அதை ஒரு வணிகமாக நடத்துபவர்கள் இருதரப்பிலும் இருக்கிறார்கள். இவர்களைப் பிடிக்கத் துப்பறியும் போலீசார் அனுப்ப முடிவு செய்திருக்கிறேன். இந்தியர்களுக்கும் அளிக்கப்பட்டிருக்கும் தற்காலிகக் குடியிருப்பு அனுமதிச் சீட்டுகளை விரிவுபடுத்துவதைப் பொறுத்தவரை அநீதி எதுவும் இழைக்கப்படாமல் பார்த்துக் கொள்வேன்."

'அதிகமான மாணவர்களை சேர்த்துக்கொள்க'

நடவடிக்கை அவசியமென அறிவிப்பு

சென்னை, ஆக. 13—

பல்வேறு தொழில் நுட்பக் கல்லூரிகளிலும் நடப்பு கல்வி ஆண்டிலேயே அதிகமான மாணவர்களைச் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று அகில இந்திய தொழில் நுட்பக் கல்விக் குழுவின் தென் பகுதிக் குழு சிபாரிசு செய்துள்ளது.

தற்போது நாட்டில் பொறி இயல் துறை ஊழியர்களுக்கு உடனடித் தேவை அதிகரித்திருப்பதால் இந்நடவடிக்கை அவசியமென அக்குழு கருத்துத் தெரிவித்துள்ளது.

'தெற்கும் வடக்கும் எப்படி ஒன்றாகி விடும்?'

'தென்னாட்டு 'அகில இந்தியா'க்காரிடம் தாழ்வு மனப்பான்மை ஏன்?'

'மக்களை மதியாத காங்கிரசாருக்கு மக்கள் பெயரால் பேசுவதற்கு நாகூசவில்லையா?'

சென்னைக் கூட்டத்தில் டி. கே. சீனிவாசன் முழக்கம்

"அகில இந்தியத் தலைவர்கள் எல்லாம் இந்தியா ஒன்று என்று பேசுகிறார்கள்; 'வடநாடும் தென்னாடும் ஒன்றுதான்' என்கின்றனர். எப்படி என்பதை விளக்க நினைக்கும்போது அவர்கள் காசியையும் இராமேசுவரத்தையும் காட்டி, 'இந்தியா ஒன்று' என்று பேசுகிறார்கள்.

"முஸ்லிம்கள்—அவர்கள் எந்த நாட்டில் இருப்பவர்களானாலும், 'சீனா, அரபு எங்களுடையவை; இந்துஸ்தான் எங்களுடையவை; நாங்கள் முஸ்லிம்கள்; நாங்கள் சகோதரர்கள்' என்ற பொருள்பட ஒரு பாட்டுப் பாடுவார்கள்; இப்படி அவர்கள் எல்லாம் முஸ்லீம்களாயிருப்பதாலேயே சீனமும் அரபும், எகிப்தும் துருக்கியும், ஆப்கனிஸ்தானும் பாகிஸ்தானும் ஒரே நாடுதானா என்றால், அவர்கள் ஒத்துக்கொள்ள மாட்டார்களே! அப்படியிருக்க, வடக்கே காசியும், தெற்கே இராமேசுவரத்தையும் காட்டி, இரண்டிற்குமிடையே வாழும் மக்கள் ஒன்றுதான் என்றால் எப்படி நியாயமாகும்?

"ஒன்றுதான் என்று சொல்லிக் கொண்டே, அணைகளையும் தொழிற்சாலைகளையும் முழுவதுமாக வடநாட்டிலேயே அமைத்துக் கொண்டார்களே! இது, ஒன்று என்பதற்கு அடையாளமா?

"இலங்கையில் தமிழர்கள் கொல்லப்பட்டதற்கு இதுவரையில் ஒரு அனுதாப வார்த்தைகூடக் கூறவில்லையே, இந்திய சர்க்கார்! இதற்குப் பெயர் ஒன்றாயிருப்பதா?

"மலேயாவில், தென்னாப்பிரிக்காவில் அவதியுறும் மக்களின் இன்னலைத் துடைக்க கிஞ்சிற்றும் கவலை கொள்ளவில்லையே! இதற்குப் பெயர் ஒன்று யிருப்பதா?

"எப்படி ஒன்றாகிவிடும், வடக்கும் தெற்கும்?

"முஸ்லீம்களுக்கு மட்டுமின்றி, ஆணில்லாத வீடுபோல, வந்தவருக்கெல்லாம் அடிமையாகிக் கலாச்சாரத்தைக் கலப்படமாக்கிக் கொண்டிருக்கிற வடநாடும், எந்தப் படையெடுப்பாலும் பாதிக்கப்படாத தென்னாடும் எப்படி ஒன்றாகிவிடும்?

"உருதுமொழியை சமஸ்கிருதத்தில் எழுதினார்கள்—அதுதான் 'இந்தி' என்று வழங்கப்படுகிறது. இந்தமொழிக்கு ஏற்றம்தர நினைத்துக் காரியமாற்றும் டெல்லியுடன் என்ன காரணத்திற்காக இனிமைத் தமிழ் கொண்ட தென்னாடு ஒன்றுபட்டிருக்க வேண்டும்?

"பணம் அங்கே—வறுமை இங்கே! வாழ்வு அங்கே—தாழ்வு இங்கே! ஏன் இந்த நிலை இருக்க வேண்டும்?

"அரசியல் கட்சிகளை எடுத்துக் கொள்ளுங்களேன்—வடநாட்டிலிருந்து இங்கு வருகிற எந்தத் தலைவனும் எதை வேண்டுமானாலும் துணிவாகக் கூறுவான். இங்கிருந்து செல்கிற எவரும் வடநாட்டில் அப்படிப் பேசமாட்டார்கள்; இதற்குக் காரணம், இந்தத் தென்னாட்டுக்காரரிடமிருக்கும் தாழ்வு மனப்பான்மைதான்.

"வடநாட்டுத் தலைவர்களை இங்குள்ள அந்தக் கட்சியினர் சந்திக்கச் செல்லும்போது, சீமான் வீட்டில் நுழையும் ஏழையின் மனோநிலையோடுதான் செல்கிறார்கள்—இந்தத் தாழ்வு மனப்பான்மையினால்!

"கம்யூனிஸ்டு கட்சி என்றால், ஜோஷிக்கும்-கோஷுக்கும் தான் விவகாரங்களில் தகராறு எழுமே தவிர, இராமமூர்த்திக்கும்-கோஷுக்கும் வராது; காரணம், இந்தத் தாழ்வு மனப்பான்மைதான்!"

—என்று, சென்னை-பெத்துநாய்க்கன்பேட்டையில், மக்கள் மன்றச் சாரயில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசுகையில் தோழர் டி. கே. சீனிவாசன் அவர்கள் குறிப்பிட்டுவிட்டு, தொடர்ந்து பேசியதாவது:—

தொடர்ந்து அவர் பேசியதாவது:—

"மைசூரில் சில மாதங்களுக்கு முன் ஒரு ஆங்கிலப் பெண் கொலை செய்யப்பட்டாள்; ஆனால், அரசியல் காரணத்திற்காக அல்ல. அந்தப் பெண்மணியைக் கொன்றவரைக் கண்டுபிடிக்க சர்க்கார் முயற்சித்தார்கள் — முடியவில்லை; — கைவிட்டு விட்டார்கள்; புலன் விசாரணையை இந்திய சர்க்கார் கைவிட்டு விட்டதைத் தெரிந்தும் இங்கிலாந்து சர்க்கார், இந்திய சர்க்காருக்கு ஒரு தாக்கீது அனுப்பிற்று—'நீங்கள் கண்டுபிடிக்கிறீர்களா? அல்லது நாங்கள் ஸ்காட்லந்து யார்டு போலீசாரை அனுப்பிக் கண்டுபிடிக்கச் சொல்லட்டுமா?'—என்று!

"இங்கே, இலங்கையில் 12 பேர் கொல்லப்பட்டிருக்கின்றனர்; அவர்கள் தமிழர்கள்; ஏன் என்று கேட்பதற்கு இந்த சர்க்காருக்கு வகையில்லை. இங்கிலாந்து சர்க்கார், தன் நாட்டுப் பெண் ஒருத்தி கொல்லப்பட்டது குறித்துக் கவலைப்படுகிறதென்றால், அவர்கள் மானமுடையவர்கள்; இவர்கள், தங்கள் நாட்டவர் 12 பேர் கொல்லப்பட்டது குறித்துக் கவலைப்படவில்லை என்றால் அதற்குக் கார

(3-ம் பக்கம் பார்க்க)

‘எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலையை அசாமிலேயே நிறுவவேண்டும்’

கல்கத்தாவில் நிறுவத் திட்டமிடும் டில்லியின் முடிவுக்கு அசாம் மாணவர்கள் கண்டனம்

கௌஹாத்தி, ஆக. 13—

புதிய எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலையை கல்கத்தாவில் நிறுவ மத்திய சர்க்கார் முடிவு செய்திருப்பதாகக் கூறப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, அசாம் மாணவர்கள் ஆர்ப்பாட்டம் செய்துள்ளனர்.

பள்ளிக்குச் செல்லாமல் மாணவர்கள் கண்டனக் கூட்டங்கள் நடத்தி, புதிய எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலையை அசாமில் நிறுவக் கோரினர்.

தங்களுடைய இலட்சியம் நிறைவேறும் வரையில் நீடித்துப்போராட்டம் நடத்துவதை மாணவர்கள் ஆதரித்தனர்.

ஷில்லாங், திப்ருகார் ஆகிய இடங்களிலும் இப்பிரச்சினை குறித்து ஆர்ப்பாட்டங்கள் நடைபெறுகின்றன.

சில இடங்களில் கடைகள் மூடப்பட்டு, போக்குவரத்துகளும் நிறுத்தப்பட்டன.

பத்திரிகைக் காகிதம் தயாரிக்க தொழிற்சாலை

நிறுவுவது பற்றி டில்லி யோசனை

புதுடில்லி, ஆக. 10—

‘மரக்கூழிலிருந்து பத்திரிகைக் காகித உற்பத்தி செய்வதற்கான திட்டம் ஒன்று குறித்து மத்திய சர்க்கார் பரிசீலனை செய்துவருகின்றனர்’ என்று மக்கள் சபையில் அமைச்சர் ஷா தெரிவித்திருக்கிறார்.

‘இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், நாட்டில், பத்திரிகைக் காகிதத் தொழிற்சாலைகள் எதுவும் புதிதாக ஏற்படுத்துவது குறித்து சர்க்கார் இன்னும் எவ்வித முடிவும் மேற்கொள்ளவில்லை’ என்றும் அவர் கூறியிருக்கிறார்.

நேபா ஆலை

நேபாவிலிருக்கும் பத்திரிகைக் காகித உற்பத்தித் தொழிற்சாலை நாளொன்றுக்கு 60 முதல் 65 டன் காகிதங்களை உற்பத்தி செய்வதாகவும், விரைவிலேயே அதனுடைய தின உற்பத்தி 100 டன்னாக உயருமென எதிர்பார்க்கப்படுவதாகவும் கூறப்படுகிறது.

ரூ. 14-இலட்சம் செலவில் 10-பழத் தோட்டங்கள்

சர்க்கார் ஆரம்பிக்குமாம்

சென்னை, ஆக. 13—

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் சென்னை மாநிலத்தில் 14 இலட்சம் செலவில் பத்து பழத் தோட்டங்கள், ‘நர்சரி’கள் ஆரம்பிக்க சர்க்கார் உத்தேசித்திருப்பதாக சட்டசபையில் விவசாய மந்திரி தெரிவித்தார்.

தனிப்பட்டவர்கள் பழத்தோட்டங்கள் ஆரம்பிப்பதற்காக வட்டியில்லாமல் ரூ. 30 இலட்சம் கடன் கொடுக்கவும் சர்க்கார் உத்தேசித்துள்ளனர்; இதற்கு மத்திய சர்க்காரிடமிருந்து பண உதவி கோரப்படுமென்றும் அவர் தெரிவித்தார்.

மூன்று போகம் நெல் விளைவு!

நீர்ப்பாசன வசதியுள்ள நிலங்களில் மூன்று போகம் நெற்பயிர் சாகுபடி செய்வதற்குள்ள நிலை பற்றி கட்டாக்கில் மத்திய அரிசி ஆராய்ச்சி நிலையத்தில் பூர்வாங்க பரிசீலனை செய்யப்பட்டது.

ஏக்கரா ஒன்றுக்கு 9,717 பவுண்டு நெல் வீதம் கிடைத்தது நடுத்தர கால நெற்பயிரை சாகுபடி செய்து அந்த மகசூல் காணப்பட்டது; அதற்கு முன்னும் பின்னுமாக இரண்டு குறுகிய காலப் பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டன.

நெற் பயிரோடு மாற்றுப் பயிராகச் சாகுபடி செய்வதற்கு பருத்தி மிகவும் ஏற்றதாக ஆராய்ச்சியிலிருந்து தெரியவந்தது; நவம்பரில் விதைத்து மே மாதத்தில் பஞ்சு எடுக்கப்பட்டது. வேர்க்கடலையையும் நெற்பயிரோடு மாற்றுப் பயிராகச் சாகுபடி செய்யலாம். ஏக்கரா ஒன்றுக்கு 1,570 பவுண்டு வேர்க்கடலை கிடைக்கும். என்ன முறைப்படி பயிர்களைச் சாகுபடி செய்யவேண்டும் என்று ஆராய்ந்ததில், நெற்பயிரை ஒரு தடவை சாகுபடி செய்வதற்கும், மறுதடவை சாகுபடி செய்வதற்கு மிடையில் தழை உரப்பயிர் சாகுபடி செய்யப்பட்டால் ஏக்கரா விகித அரிசி உற்பத்தி அதிகப்படுகிறதென்று தெரியவந்திருக்கிறது.

சிவில் சட்டங்களிலிருந்து முன்னாள் மன்னர்களுக்கு விதி விலக்கு

நிலையைமாற்ற மக்கள் சபையில் தனிநபர் மசோதா

புதுடில்லி, ஆக. 10—

‘இதர எல்லா குடிமக்களையும் போலவே, சிவில் சட்டங்களுக்கு முன்னாள் மன்னர்களும் ஆட்பட்டவர்களாக இருக்கவேண்டும்’ என்று கோரும் மசோதா ஒன்று, மக்கள் சபையில் திரிவேதி என்ற காங்கிரஸ் உறுப்பினரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறதாகத் தெரியவருகிறது.

சிவில் சட்டங்களிலிருந்து, இந்த முன்னாள் மன்னர்களுக்கு சில விசேட விதிவிலக்குகள் தரப்படுவதைத் திருத்துவதற்கே இந்த மசோதா வழி செய்கிறது.

கைத்தறிகளைப் பதிவு செய்தல்

சென்னை அரசாங்கம் அறிவிப்பு

சென்னை, ஆக. 13—

“சென்னை மாகாணத்தில் கைத்தறிகளைப் பதிவு செய்வதற்காகத் தனி அலுவலர்களை நியமித்துக் கொள்ள சென்னை அரசாங்கம் அறிவித்துள்ளது; தங்கள் வட்டாரங்களிலுள்ள கைத்தறிகளைப் பதிவு செய்து கொள்ளுவதற்குத் துணைப்பதிவாளர்களுக்கு (ரெஜிஸ்திரார்களுக்கு) அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது; செப்டம்பர் மாத இறுதிக்குள் கைத்தறிகள் பதிவு செய்தல் முடிந்துவிடுமென்றும் நம்பப்படுகிறது” என்று கைத்தறித் துறை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்!

அவசியமான புள்ளி விவரங்கள் இல்லாமல் எந்த வளர்ச்சித் திட்டங்களையும் வகுக்க இயலாது ஆகையால் இவற்றைச் சேகரிக்க வேண்டுமென்பதுதான் மத்திய, மாகாண அரசாங்கங்களின் குறிக்கோளாகும்.

“பயன்படுத்தப் படாமலிருக்கும் கைத்தறிகளையும் பதிவு செய்யலாம்; தங்கள் பெயரைப் பதிவு செய்யாதிருந்தபோதிலும் யாரும் இந்தத் தறிகளில் வேலைசெய்யலாம்” என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தேசீயமயமாகாது?

புதுடில்லி, ஆக. 13—

“அடுத்த 5 ஆண்டுகளுக்குச் சாமான்களின் போக்குவரத்துக்குப் பயன்படும் போக்குவரத்துத் தொழில், (லாரி, வான் முதலியவை) தேசீயமயமாக்கப்படமாட்டாது” என்று இந்திய அரசாங்க இரயில்வே, போக்குவரத்துத் துறை துணை அமைச்சர் மக்கள் சபையில் அறிவித்துள்ளார்.

தேர்தல் குழு திட்டம் தயாரிக்கிறது

15 நாட்களில் வாக்கெடுப்பு முடிந்துவிடும்?

புதுடில்லி, ஆக. 13—

வருகிற 1957-ம் ஆண்டில் நடைபெறப்போகும் பொதுத் தேர்தலில் வாக்கெடுப்பு 15 நாளில் —அதாவது, பிப்ரவரி 1-ம் தேதி தொடங்கி, 15-ம் தேதி முடிய நடத்துவதற்கான திட்டம் ஒன்றை தேர்தல் குழு வகுத்திருப்பதாகக் கூறப்படுகிறது.

மக்கள் சபை, மாகாண சட்டசபைகள் தேர்தல்களின் முடிவுகள் பிப்ரவரி இறுதிக்குள் அறிவிக்கப்பட்டுவிடும்.

இந்தியத் தலைமை நீதிமன்ற நீதிபதி திரு. எம் சந்திரசேகரன் அய்யர், தொகுதிநிர்ணயக் குழுவின் தலைவராக இருப்பார் என அறியப்படுகிறது.

மாகாணச் சீரமைப்பு மசோதா மத்திய மேல்சபையிலும் நிறைவேறிய பின்னர், தொகுதி நிர்ணயக் குழு நியமிக்கப்படுமெனத் தெரிகிறது.

கல்லூரியில் தமிழைப் போதனு மொழியாக்க நடவடிக்கை

சர்க்கார் நிலை குறித்து விளக்கம்

சென்னை, ஆக. 13—

“தமிழைப் போதனு மொழியாக்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துவருகிறது; கல்லூரிகளில் தமிழைப் போதனு மொழியாக்குவதற்குச் சென்னை பல்கலைக் கழகம் மறுப்புத் தெரிவித்தால், மக்கள் நலனைக் கருதி அரசாங்கம் இச்சிக்கலில் நிச்சயமாகத் தலையிடும். கல்வி முறை. அத்துறையில் சிறந்த நிபுணர்களால் அமைக்கப்படவேண்டுமென்பது உண்மையே.

“ஆனால், அரசாங்கமும் தன்னுடைய கடமைகளிலிருந்து விலகிக்கொள்ள விரும்பாது. மக்களின் நன்மைக்காகச் சிறந்த முறைகள் ஏற்படுத்தப்படுகின்றனவா என்று கவனிப்பது அரசாங்கத்தின் முக்கியக் கடமையாகும்,”

என்று, கல்வி அமைச்சர் சி. சுப்பிரமணியம் சென்னை சட்டசபையில் தெரிவித்துவிட்டு மேலும் சொன்னார்:—

“பல்கலைக் கழகம் ஒரு தனித் தியங்கும் நிறுவனம். இத்தனித் தியங்கும் உரிமையும் சட்டசபையால் ஏற்றுக்கொள்ளப்பட்டதாகும்.

“எனவே பல்கலைக் கழகச் சட்டத்தை அரசாங்கம் திருத்த வேண்டும் என்னும் யோசனையை ஏற்றுக்கொள்வதாக இல்லை. அச் சட்டத்தை அரசாங்கம் திருத்த வேண்டிய அவசியமும் இப்பொழுது ஏற்பட்டுள்ளதாகத் தெரியவில்லை.

“ஆனால், பல்கலைக் கழகத்தின் சில கொள்கைகள் அரசாங்கத்தின் கொள்கைகளுடன் முரண்படுமானால், அப்பொழுது அரசாங்கம் நிச்சயமாகத் தலையிட்டே தீரும். கல்லூரிகளில் போதனு மொழி ஏற்படுத்துவது ஒரு முக்கியமான சிக்கலாகும்.”

வறுமை இங்கே! செல்வம்...

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

ணத்தை நீங்களே தெரிந்துகொள்ளுங்கள்!

‘இப்படி, காங்கிரஸ் ஆட்சியாளர்கள் மக்களை மதிப்பதில்லை; ஆனால், ‘ஓட்’ மட்டும் கேட்க வந்து விடுகிறார்கள்.

“தேவிகுளம், பீ. மேடு பகுதிகளில் வாழும் மக்கள், ‘நாங்கள் தாய்த் தமிழகத்தோடுதான் இருப்போம்’ என்று ஒருமுறைக்குப் பன்முறை தீர்ப்புக் கூறினார்கள். அந்த மக்களின் தீர்ப்புக்குக் காங்கிரசார் தந்த மதிப்பு என்ன? அப்படியிருக்கும்போது, காங்கிரசுக்கும் மக்களுக்கும் என்ன தொடர்பு?

“பம்பாயில் குஜராத்திகளின் ஆதிக்கம் இருக்கலாம்; அவர்கள் முதல் போட்டு நடத்தும் தொழில் நிலையங்கள் ஏராளமிருக்கலாம்; ஆனாலும், பம்பாய் மராட்டியருடையது என்பது மட்டும் மறுக்கமுடியாத உண்மையல்லவா?

“பிரெஞ்சுப் பகுதிகளிலிருந்து பிரெஞ்சுக்காரரை ஏன் வெளியேறுமாறு சொன்னார்கள்? அந்தப் பகுதிகளில் பிரெஞ்சுக்காரரின் ஆதிக்கம் இருந்தாலும்கூட அவை இந்த நாட்டின் பகுதிகள் என்பதால்தானே, சுதந்திரம் கேட்டார்கள்?

“அதுபோலவே, பம்பாயில் குஜராத்தியரின் பிடிப்பு—ஆதிக்கம் இருந்தாலும், பம்பாய் மராட்டியருடையதல்லவா?

“இந்த உரிமையைக் கேட்ட மக்களை, கொல்வதற்காகவே சுட்டார்கள் காங்கிரஸ் ஆட்சியாளர்! இவர்களுக்கு எந்த முகம் உண்டு மக்களுக்காகப் பேசுவதற்கு?

“1948-ல், அசாம் மாநில கவர்னராயிருந்த சர். அக்பர் ஹைதரி, மூன்றாகப் பிரிந்திருந்த நாகமலைப் பிரதேசங்களை ஒன்றாக இணைத்து ஒரு மாநிலம் அமைப்பது என்ற ஒப்பந்தத்தை நாகர் தலைவர்களுடன் சேர்ந்து செய்து கொண்டார்; ஆனால் அந்த ஒப்பந்தத்தை, 1950-ல் சர்க்கார், குப்பைத் தொட்டிக்கு அனுப்பி விட்டனர்.

இப்படி, மக்களோடு செய்து கொண்ட ஒப்பந்தத்தை சர்க்கார் மீறியிருக்கிறது. இந்தப் போக்குடைய காங்கிரசார், மக்களுக்காகப் பேச—நடமாட என்ன உரிமை படைத்தவர்கள்?

‘நம்மைப்பற்றிப் பேசும்போதெல்லாம் காமராசர், ‘இவர்கள் நாட்டைத் துண்டாடுகிற கட்சி’ என்று பேசுகிறார்.

“உண்மைதான்; நாம் கேட்பதெல்லாம், ‘நாட்டைத் துண்டாடினால் மக்களுக்கு என்ன நட்டம்? காமராசருக்கு என்ன நட்டம்? வேண்டுமானால், நேருவுக்கு நட்டமிருக்கலாம்; டாடாவிற்கு நட்டமிருக்கலாம்; ஆனால் காமராசருக்கும் சுப்பிரமணியத்திற்கும், தொடர்ந்து தங்கள் சயமரியாதையை வடநாட்டில் அடகு வைக்க முடியாது என்பதைத் தவிர வேறு என்ன நஷ்டம்?

“கம்யூனிஸ்டு நண்பர்கள் நம்மை ஒன்று கேட்டார்களாம் —‘தி. மு. கழகம் திராவிட நாடு பிரிவினையை தேர்தல் கொள்கையாக வைத்து நிற்குமா? அப்படி வைத்தால், அது அகில இந்திய கட்சிகளுக்குத் தரப்படும் அறைகூவலாகும்’—என்று!

“அவர்களுக்குச் சொல்லுகிறோம் — ‘கம்யூனிஸ்டுகள், கம்யூனிசத்தைத் தேர்தல் கொள்கையாக வைத்துத் தேர்தலில் நிற்கட்டும்; பிறகு நாங்கள், திராவிடநாடு பிரிவினையை தேர்தல் கொள்கையாக்குகிறோம்’—என்று!

“நாம், பிரிவினையைத் தேர்தல் கொள்கையாக வைத்தால் அது அகில இந்திய கட்சிகளுக்குத் தரப்படும் அறைகூவலாம்! இருக்கலாம்; ஆனால், நாம் இருப்பதே—தி. மு. கழகம் நாட்டில் நிலைபெற்றிருப்பதே—அந்தக் கழகத்தின் இலட்சியத்தையும் கொள்கைகளையும் பல்லாயிரவர் ஏற்றுக்கொண்டிருப்பதே அகில இந்தியக் கட்சிகளுக்குத் தரப்பட்டிருக்கும் அறைகூவல் அல்லவா?

‘மாபெரும் அநீதி’

புதுடில்லி, ஆக. 13—

“மகாராட்டிரர்களும், குசராத்திகளும் விரும்பாதபோது அவர்கள் மீது இருமொழி பம்பாய் மாகாணம் திணிக்கப்பட்டுள்ளது; இவ்விரு சமுதாயத்திற்கும் இழைக்கப்பட்ட மாபெரும் அநீதி இது வாகும்.”

இவ்வாறு டாக்டர் என். பி. கரே இன்று விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஏற்றுமதி செய்யவில்லை?

புதுடில்லி, ஆக. 13—

‘கடுகு எண்ணெயோ அல்லது கடுகோ சோவியத் யூனியனுக்கு ஏற்றுமதி செய்யப்படவில்லை’ என்று அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது; ஆனால், கடுகு விதை, கடுகு எண்ணெய் ஏற்றுமதிகள் தடைசெய்யப்பட்டுள்ளனவாம்.

அதிகரிக்கவில்லையாம்!

“பழைய சமஸ்தானங்களின் தலைநகரங்களில் வேலையில்லாமல் திண்டாடுபவர்களின் எண்ணிக்கை மிகவும் உயர்ந்து விட்டது என்று சொல்வதற்கில்லை” என்று மக்கள் சபையில் அமைச்சர் தத்தார் கூறியுள்ளார்.

மேட்டூரில் அலுமினியத் தொழிற்சாலை?

ரூ. 12-கோடி செலவில் நிறுவப்படும்?

புதுடில்லி, ஆக. 12—

ஆண்டுக்கு சுமார் 10,000 டன்கள் உற்பத்தியுள்ள 3 அலுமினியத் தொழிற்சாலைகள் சென்னை, ஒரிசா மாநிலங்களில் ஏற்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டிருக்கிறதாம்.

சென்னை மாநிலத்தில் மேட்டூரில் அலுமினியத் தொழிற்சாலை நிறுவப்படும்; இது, சர்க்கார் (பொது) துறையில் ஏற்படுத்தப்படுமாம்; இது சம்பந்தமாக மத்திய சர்க்கார் தொழில்—வர்த்தக இலாகா ஒரு அமெரிக்க நிறுவனத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறதாம்; இதற்கு 10 முதல் 12 கோடி ரூபாய்வரையில் செலவாகுமென மதிப்பிடப்படுகிறது; இதற்கான மின்சாரத்தை பெரியாறு நிலையத்திலிருந்து நியாயமான விலையில் தருவதாக இந்திய சர்க்காருக்குச் சென்னை சர்க்கார் வாக்களித்துள்ளனர்.

மின்சார வசதியைக் கட்டுப்படுத்தக் குழு?

சென்னை அரசாங்கம் முடிவு

சென்னை, ஆக. 13—

தொழில்களுக்கு மின்சாரம் வழங்க அனுமதியளிப்பது அல்லது மறுப்பது பற்றிய அதிகாரம் ஒரு குழுவின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கவேண்டுமென்று மாகாண அரசாங்கம் முடிவுசெய்திருக்கிறது

இடையூறாக இருக்காதாம்!

சென்னை, ஆக. 13—

“சென்னையில் மத்திய அரசாங்கத்தால் நிறுவப்பட இருக்கும் தென் பகுதி உயர்தரத் தொழில் நுணுக்கக் கழகம் கிண்டி பொறியியல் கல்லூரியை விரிவுபடுத்துவதைப் பாதிக்காது” என்று சென்னை மேல் சபையில் விவசாய, தொழில்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இக்கல்லூரிக்குத் தேவையான உதவியையும் மத்திய அரசாங்கம் செய்யும் எனத் தாம் கருதுவதாகவும் அவர் கூறியுள்ளார்.

ஆந்திரா-சென்னை எல்லைத் தகராறு

ஆந்திர கவர்னரின் சட்டசபை உரையைச் சாடுகிறார் சென்னை நிதி அமைச்சர்

எல்லைக் குழு உடனே வேண்டுமெனவும் கோரிக்கை

சென்னை, ஆக. 13—

"ஆந்திரா—சென்னை எல்லைத் தகராறு குறித்த விவகாரம், இரு மாநில சர்க்கார்களுக்கு இடையேயும் — டில்லிக்கு இடையேயும் கடிதப் போக்கு வரத்தில் இருக்கும்போது, அதுபற்றிய ஒரு கொள் கையை, ஆந்திர சட்டசபை யில் கவர்னர் நிகழ்த்திய உரையில் அறிவிப்பது எந்த வகையில் நியாயமானதாகும்?"

என்று, நிதிமந்திரி சுப்பிரமணியம் சென்னை சட்டசபையில் கேட்டிருக்கிறார்.

"கவர்னர் உரையில், எவை எவை இடம் பெற வேண்டுமென்பது குறித்து, நாம், சில நல்ல நிர்ணயங்களை—சம்பிரதாயங்களை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்; ஏனெனில், அப்போதுதான் ஒரு மாநில கவர்னரின் உரை குறித்து மற்றொரு மாநில சட்டசபை விவாதிக்க வேண்டிய நிலை ஏற்படாது. மேலும், மாநிலங்களுக்கிடையே உள்ள விவகாரங்கள் குறித்து இந்த நிர்ணயம் அவசியமாகும்,"

என்றும் அவர், சற்று கடுமையான குரலில் பேசியிருக்கிறார்.

தொடர்ந்து பேசிய அவர், 'நீண்ட நாட்களாக உள்ள ஆந்திர—சென்னை எல்லைத் தகராறினைத் தீர்ப்பதற்காக ஒரு எல்லைக் கமிஷன் உடனடியாக நியமிக்கவேண்டும்' என்ற கோரிக்கையையும் வற்புறுத்தினர்.

"மொத்தத்தில் இந்த சர்க்காரைப் பொறுத்தவரையில், அது சட்டசபைக்குத் தந்த உறுதிமொழிகள் பலவற்றை நிறைவேற்ற முடியாது போய்விட்டது என்பதை ஒப்புக்கொள்ளுகிறேன்" என்றும் கூறியிருக்கிறார்.

[ஆந்திர கவர்னர் கடந்த 8-ந் தேதியன்று கர்னூல் சட்டசபையில் உரை நிகழ்த்தும்போது, 'ஆந்திர—சென்னை எல்லைத் தகராறுக்கு முடிவு காணுவதற்கு முன்பாக, மத்திய சர்க்கார், ஆந்திராவிற்கும் இதர மாநிலங்களுக்கும் இடையேயுள்ள எல்லைத் தகராறுகளைத் தீர்ப்பதற்கு உதவக்கூடிய வகையில் ஒரு ஒரே வகைக் கொள்கையை வகுக்கவேண்டும் என்று ஆந்திர சர்க்கார் கருதுகிறது. இதனை சென்னை, மத்திய சர்க்கார்களுக்கும் தெரிவித்துவிட்டது' என்று கூறினர்.]

காரோட்டுபவருக்குப் பாராட்டு

"15-8-56 காலை 9-மணியளவில், தியாகராயநகர் வாணி மகாலில், எங்களிடம் சுமார் 25 ஆண்டுகளாக டிரைவராகப் பணியாற்றிவரும் திரு. பி. தினகர்ராஜ் அவர்களுக்கு எங்கள் அன்பின் அறிகுறியாக அன்னாரின் சேவையைப் பாராட்ட இவ்விழாவினை ஏற்பாடு செய்திருக்கிறோம்; அனைவரும் வந்திருந்து சிறப்பிக்க வேண்டுகிறோம்"

என்று, என். எஸ். கிருஷ்ணன்—டி. ஏ. மதுரம் அறிவிக்கின்றனர்.

சொற்பயிற்சிக் கூட்டம்

சென்னை—சூளை ஊ. பு. அ. சௌந்திரபாண்டியனுர் நினைவுப் படிப்பகத்தில் 15—8—56 மாலை 6-30 மணியளவில், 55-வது சொற்பயிற்சிக் கூட்டம், தோழர் இராமதாசு தலைமையில் நடைபெறும்; 'அரசியல் வரலாறு' எனும் தலைப்பில் பலர் பேசுவர்.

ஆலயங்களைப் புதுப்பிப்பதுபற்றி அறநிலைய மந்திரி

சென்னை, ஆக. 13—

எல்லா கோயில்களையும் புதுப்பிப்பது என்பது சாத்தியமில்லை என்றும், ஆழ்வார்கள், நாயன்மார்கள் ஆகியோரால் பாடப்பட்ட ஆலயங்களையெல்லாம் புதுப்பிப்பதே சர்க்கார் திட்டம் என்றும் அமைச்சர் பரமேசுவரன் சென்னை சட்டசபையில் அறிவித்திருக்கிறார்.

'அறநிலையங்களின் உபரி பணத்திலிருந்து ஒரு பகுதியை இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் கல்வி நிறுவனங்கள் திறப்பதற்கு ஒதுக்கலாம்' என்று மத்திய சர்க்காரிடமிருந்துத் தகவல் வந்ததாகவும், ஆனால் இதைச் செய்ய சட்ட நிலை இடம் கொடுக்கவில்லையாதலால் அது சாத்தியமில்லை என்றும் அவர் கூறியிருக்கிறார்

மேலும், சட்டத் திருத்தம் செல்லாது என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்ததையும் அவர் சுட்டிக் காட்டியிருக்கிறார்

இனிப்பான பேச்சு!

"சென்னை மாநில மக்கள் ஆங்கில மொழியைத் திறமையாகப் பேசுவதில் புகழ் எய்தியுள்ளனர் அதுபோன்றே இந்தி மொழியையும் கற்றுக்கொள்ள அவர்கள் முற்படுவார்களேயானல், சென்னை கவர்னரையோ, அல்லது என்னையோ தோற்கடிக்கும் அளவுக்கு இந்தியில் வன்மை பெறக்கூடிய திறமை அவர்களுக்கு உண்டு என்பது எனது கருத்தாகும்"

என்று, சென்னை-சோடம்பாக்கத்திற்கு அருகில் உள்ள சாலிக் கிராமத்தில், கைத்தொழில் பயிற்சி நிலையைத் துவக்கி வைத்துப் பேசுகையில் குடியரசுத் தலைவர் இராசேந்திரப் பிரசாத் கூறியுள்ளார்.

3,000 விசைத்தறிகள் புகுத்தப்படும்

இதனல் கைத்தறி நெசவாளர்கள் வேலை இழக்கமாட்டார்களாம்

தொழில் அமைச்சர் பக்தவத்சலம் கூற்று

சென்னை, ஆக. 13—

மாநிலத்தில் கைத்தறிகளை விசைத்தறிகளாக மாற்றுவது பற்றி இந்திய சர்க்காரிடமிருந்து வந்துள்ள திட்டத்தை மாநில சர்க்கார் ஆலோசித்து வருவதாக தொழில் அமைச்சர் பக்தவத்சலம் சென்னை சட்டசபையில் கூறியிருக்கிறார்.

கேள்விகளுக்கு அவர் பதில் கூறுகையில் குறிப்பிட்டதாவது :-

"நான் முன்பு அறிவித்தக் கொள்கைக்கு இது முரணல்ல; இது ஒரு திட்டமே! இதுபற்றி விவாதிக்க உறுப்பினர் ஒருவர் நோட்டீஸ் கொடுத்திருக்கிறார். விவாதத்தின்போது நிலைமையை விளக்கப் போகிறேன்.

"இத்திட்டத்தால் ஒரு கைத்தறி நெசவாளர்கூட வேலை இழக்கப்போவதில்லை. மாநிலத்தில் 5,60,000 கைத்தறிகள் உள்ளன. இதில் 1,57,000 தறிகள் கூட்டுறவுச் சங்கங்களில் உள்ளன. இவ்வருடம் 3,000 கைத்தறிகளும், அடுத்த வருடம் 3,000 கைத்தறிகளும் விசைத் தறிகளாக மாற்றப்படும்; இதனல் வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்பட்டுவிடாது."

'நண்பர்களாகவே பிரிவோம்'

சட்ட சபையில் மந்திரி சுப்பிரமணியம் தகவல்

சர்க்கார் ஊழியர் குறை பற்றிய திருத்தம் தோல்வி

சென்னை, ஆக. 13—

"தமிழர்கள், மலையாளிகள், கன்னடியர்கள் ஆகியோரிடையே நல்லெண்ணமும் நம்பிக்கையும் மிகுந்த ஒரு சூழ்நிலை வேண்டும்; ஏனெனில், அப்போதுதான் நாம் நண்பர்களாகவே பிரிய முடியும். பின்னர், நாளை இல்லாவிட்டாலும் பிறிதோர் நாள் நாம் ஒன்றுகூட முடியும்,"

என்று, சட்ட சபையில் மந்திரி சுப்பிரமணியம் கூறியிருக்கிறார்.

கவர்னர் நிகழ்த்திய உரைமீது கடந்த 3 நாட்களாக நடைபெற்ற விவாதத்திற்குப் பதிலளித்து மந்திரி சுமார் 90 நிமிட நேரம் பேசியிருக்கிறார்.

அப்போது அவர், பிரிந்து போகும் நேரத்தில் மலையாளிகள் சிலர், இல்லாத குற்றச்சாட்டுகளை சர்க்கார் மீது சுமத்துவது நல்லதல்ல என்றுகூறி, 'பிரியும்போது நண்பர்களாகவே நல்லதோர் சூழ்நிலையில் பிரிவோம்' என்று கூறியிருக்கிறார்.

கவர்னருக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் நிறைவேறியதாம்

தீர்மானத்திற்கு, 'என். ஜி. ஓ-க்களின் குறைகள் குறித்து கவர்னர் உரையில் ஏதுமில்லாதது வருந்தத்தக்குரியது' என்று எதிர்க் கட்சியினர் கொண்டுவந்த திருத்தம் தோல்வியுற்றிருக்கிறது.

மெட்ரிக் அளவு முறைகள்

புகுத்த டில்லி மசோதா கொண்டு வந்துள்ளது

புதுடில்லி, ஆக. 13—

நாடு முழுவதும் ஒரே மாதிரியாக மெட்ரிக் அளவு முறையை அமுல் நடத்த வகை செய்யும் மசோதா ஒன்றை தொழில் மந்திரி நித்தியானந்த கனுங்கோ மக்கள் சபையில் கொண்டு வந்தார்.

இதன்படி நீளத்தின் 'யூனிட்', 'மீடர்' ஆகும்; எடையின் 'யூனிட்', 'கிலோ கிராம்' ஆகும்.

10 ஆண்டுகளுக்குள் புதுமுறை பூராவும் அமுலுக்கு வந்துவிட வேண்டுமென்று மசோதா கூறுகிறது. இந்த இடைக்காலத்தில் தற்போதுள்ள அளவுகளும் தேவைக்குத் தக்கபடி அனுமதிக்கப்படும்.

நாட்டில் தற்போது அமுலிலுள்ள அளவுகள், சேர், பவுண்டுகள் என்பன. இவை நாடு பூராவும் நன்றாக அமுல் நடத்தப்படவில்லையாதலால், நாட்டின் பல்வேறு பகுதிகளில் பல்வேறு முறைகள் அனுஷ்டானத்திலுள்ளன. மேலும் ஒரே பெயர் பல இடங்களில் பல விதமாகக் கருதப்பட்டு வருகிறது. ஆகவே நாடு முழுதும் ஒரே மாதிரியான அளவுகளை அமுல் நடத்துவது அவசியமாகிறது இதற்கு மெட்ரிக் முறையே சிறந்தது என்று சர்க்கார் முடிவு செய்துள்ளனர் ஏனெனில் இம்முறையை 70 நாடுகள் மேற்கொண்டுள்ளன.

மெட்ரிக் அளவுடன் தசாம்ச நாணய முறையும் அமுல் நடத்தப்பட்டவுடன் தொழில், வர்த்தகத்துக்கு மிகவும் உதவியாயிருக்குமாம்.

திருமண அழைப்பு

அன்புடையீர்,

நாளது ஆவணித் திங்கள் (19—8—56) ஞாயிறு காலை 9-மணியளவில், என்மகன் செல்வன் : காங்கயனுக்கும், பேளுக்குறிச்சி மிட்டாதார் வி. சுப்பராய (கவுண்டர்) அவர்களின் மகள் செல்வி : மங்களம்மாளுக்கும் பேளுக்குறிச்சியில் எனது இல்லத்தில் அண்ணு அவர்கள் தலைமையில் நடைபெறவிருக்கும் திருமணவிழாவிற்குத் தாங்கள் வருகை தந்து சிறப்பிக்குமாறு பணிவன்புடன் வேண்டுகிறேன்.

குறிப்பு : இதனையே அழைப்பாகக் கருதி, திருமண விழாவில் தோழர்கள் யாவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

யானும் அவ்வண்ணமே கோருகிறேன் :
வி. சுப்பராய கவுண்டர்,
மிட்டாதார், பேளுக்குறிச்சி

தங்களன்புள்ள
ஜி. பி. சோமசுந்தரம்
பேளுக்குறிச்சி

அண்ணு

சுற்றுப்பயணம்

ஆக. 19 : காலை-பேளுகுறிச்சி
மாலை-இராசிபுரம்
20 : காலை-சேலம்
மாலை-குளத்தூர்

துணைப் பொதுச்செயலாளர்

என். வி. நடராசன்

சுற்றுப்பயணம்

ஆக. 15 : பண்ணைக்காடு
16 : சிவகிரி
17 : திண்டுக்கல்
18 : சின்னத்தம்பி பாளையம்
19 : காலை-பேளுகுறிச்சி
மாலை-இராசிபுரம்
20 : காலை-சேலம்

திருச்சி நகர தி. மு. க.

தோழர்களுக்கு அறிவிப்பு

"திருச்சி நகரத்தில் வாக்காளர்களாகப் பதிவு செய்து கொள்ளாதத் தோழர்கள், 20-9-56-ந் தேதிக்குள் திருச்சி தாலுகா ஆபீசில் தங்கள் பெயர்களைப் பதிவு செய்துகொள்ள வேண்டுகிறேன். மற்ற விபரங்கள் திருச்சி நகர தி. மு. கழகத்தில் தெரிந்து கொள்ள வேண்டுகிறேன்,"

என்று, திருச்சி நகர தி. மு. க. செயலாளர் எம். எஸ். மணி அவர்கள் அறிவிக்கிறார்.

பம்பாய்—மாதுங்கா தி. மு. கழக உறுப்பினர்களுக்கு

"29—7—56-ல் நடைபெற்ற பம்பாய் தி. மு. கழக பொது உறுப்பினர் கூட்ட முடிவுப்படி மாதுங்கா தி. மு. கழகக் கிளையின் தேர்தல் பி. பி. மாதுங்கா எண் 76-ஏ, இலாவியா கட்டிடத்தில் நடைபெறும். எல்லா உறுப்பினர்களும் தவறாது கலந்துகொள்ளுவதுடன், செயலாளர், துணைச் செயலாளர் பொருளாளர், செயற் குழு உறுப்பினர் ஆகிய முக்கியப் பொறுப்புகளில் பங்கு கொள்ள விரும்பும் தோழர்கள் கீழ்க்காணும் முகவரிக்குத் தங்கள் விருப்பத்தைத் தெரியப்படுத்த வேண்டுகிறேன்,"

என்று, மாதுங்கா தி. மு. கழகச் செயலாளர் கேட்டுக்கொள்கிறார்

முகவரி :—தொ. து. அன்புசெழியன், செயலாளர் மாதுங்கா தி. மு. கழகம், பிளாக், ரெட் பெர்பியூமர்ஸ், புரூட் மார்க்கெட் மாதுங்கா—பம்பாய்-19.

'மகா குசராத் வேண்டும்'...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

'மகா குசராத்' அமைப்பதற்கா என்றுகூறி இந்த சமிதி கடந்த வாரம் அமைக்கப்பட்டிருக்கிறது.

'மகா குசராத்' அமைப்பதற்கு ஆதரவாக, துவக்கத்தில் 5 இலட்சம் கையெழுத்துகள் வாங்குவதென இந்த சமிதி முடிவு செய்து இதற்காக அகமதாபாத், ராஜ்கோட், சூனகாத், மியாகம் என்ற இடங்களுக்குத் தொண்டர்களை அனுப்பியுள்ளதாம்!

★★★★★★★★-★★★★★★★-★★★

மகத்தான விருந்து!

'திராவிடன்'

ஆசிரியர் : என். வி. நடராசன்)

★

10-ம் ஆண்டு துவக்க சிறப்பிதழ்

கண்கவர் முகப்பு!
கருத்துமிக்க எழுத்தோவியம்!
களிப்பூட்டும் அம்சம்!

விலை 4 அணு

17-8-56 அன்று வெளிவருகிறது

உங்கள் பிரதிக்கு உள்ளூர் விற்பனையாளரிடம் பதிவு செய்துகொள்ள வேண்டுகிறோம்

நிர்வாகி - 'திராவிடன்'-சென்னை-1

★★★★★★★-★-★★★★★★★★★

சூளை எஸ். முத்தையா நினைவுப் பள்ளி வளர்ச்சி நிதிப் படக் காட்சி

15—8—56 காலை 9-30 மணிக்கு, மேற்படி நினைவுப் பள்ளி வளர்ச்சி நிதிக்காக, சென்னை — பெரம்பூர் மகாலட்சுமி தியேட்டரில்,

தோழர் சி. பி. சிற்றரசு தலைமையில்

'கைதி'

என்ற படக் காட்சி நடைபெறும்.

—அமைப்பாளர்கள் :
சூளை தி. மு. கழகம்

சித்தூர் மாவட்ட

திராவிட முன்னேற்றக் கழகச்

செயற்குழுக் கூட்டம்

"19-8-56 காலை 10-மணிக்கு, சித்தூர் மாவட்ட தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டம், வங்கனூர் (திருத்தணி வழி) தி. மு. கழகத்தில் நடைபெறும்,

என்று, சித்தூர் மாவட்டச் செயலாளர் கே பார்த்தசாரதி அவர்கள் அறிவிக்கிறார்.

திருக்குறள் வகுப்பு

15—8—56 மாலை 6-மணிக்கு, சென்னை — புரசைவாக்கம் எண் 100, வெள்ளாளத் தெரு, தொண்டைமண்டல வேளாளர் சங்கத்தில், பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் திருக்குறள் வகுப்பு நடத்துவார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம் ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.